1984 மார்ச் 26]

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதரவற்ற விதவைகளினுடைய குழந்தைகளுக்கு படிப்பு உதவித் தொகை மற்றும், உதவித்தொகைகளைப் பற்றி இந்த விவர அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதற்காக மனுச் செய்கின்ற தகுதியுள்ள அத்தனை பேர்களுக்கும் இது வழங்கப்படுகின்றதா? இது குறிப்பிட்ட ஒருசில, 50 மாணவர்களுக்கோ, அதற்கு குறைந்த எண்ணிக்கை உள்ளவர்களுக்கோ என்ற அளவில்தான் வழங்கப்படுகிறது. ஆகவே இதை எந்த முறையில் தேர்ந்தெடுக்கிறார்கள் இதற்கு எப்படிப்பட்ட சிபார்சுகள் செய்யப்படவேண்டும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண் 1242 சமூகநலன், நாள் 17—7—1979-ன்படி தனியாரால் நடத்தப்படும் தொண்டு நிறுவனங்களுக்கு 50 குழந்தைகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் பாதுகாப்பிற்காக மாதத்திற்கு ரூபாய் 36 அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்தத் திட்டம் மறு பரிசீலனை செய்யப்பட்டு இன்றைக்கு 50 குழந்தைகளும், அரசால் நடத்தப்படுகின்ற சேவை இல்லங்களில் சேர்த்து, அவர்களுக்கு பாதுகாப்பிற்கும் படிக்கின்ற அளவிற்கும் புத்தகத்திற்கும், ஆடைக்கும் மற்றும் உணவுச்கும் உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. இதையும் தவிர, இன்றைக்கு பள்ளிகளில் படிக்கும் 1-ம்வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்பு வரை படிக்கும் அந்தக் குழந்தைகளுக்கு புத்தகங்கள் வழங்குவதற்காக அரசு உதவிகள் செய்து வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) அரசு ஊழியர்களுக்கு மார்ச் மாத ஊதியத்தை அம்மாத இறுதிக்குள் வழங்குவது.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் தெலுங்கை த்தாய் மொழியாகக் கொண்டு கணிசமான பேர்கள் இருக்கிறார்கள். பல லட்சக்கணக்கான அரசு ஊழியர்களிலும், தெலுங்கை தாய் மொழியாகக் கொண்டவர்கள் பெரும்பான்மையினர் இருக்கிறார்கள். அதில் குறிப்பிடத்தக்கவர்கள் ஸ்கேவன்ஜர்ஸ் போன்றவர்கள். அவர்களுக்காகத்தான் தெலுங்கு வருடப் பிறப்பை முன்னிட்டு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரும் 2 ஆம் தேதி கூட நாம் விடுமுறை அளித்திருக்கிறோம். இந்த நிலையில் இந்த மாதச் சம்பளம், மாநில அரசு ஊழியர் களுக்கு எப்போதும் தருவது போல இந்த மாதமே வழங்கப் படாமல், ஏப்ரல் 4 ஆம் தேதி வழங்கப்பட இருப்பதாகச் சொன் னார்கள். பண்டிகையினை முன்னிட்டு மார்ச் 31 ஆம் தேதியே சம்பளம் கொடுத்தால் வசதியாக இருக்கும்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதியாண்டின் இறுதி மார்ச் 31 ஆம் தேதி, சம்பளம் கொடுக்க முடியாது. மார்ச் மாதமே கொடுத்தால் இவ்வாண்டு அவர்களுக்கு 13 மாத சம்பளம் என்றாகி நட்டம் தான் வரும். ஏப்ரல் மாதம் சம்பளம் வாங்கினால்தான் வேலையில் உள்ளவர்களுக்கு லாபம். இதெல் லாம் நிர்வாகப் பிரச்னை. நீங்கள் மீனவர்கள் சப்ஜெக்ட்டிலே தான் அத்தாரிட்டி; உட்காருங்கள்.

(ஆ) உறுப்பினர் பழைய விடுதியில் கொசுத் தொல்லை.

திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய சட்டசபை விடுதியிலே கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. அதை தங்களின் கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடிந்தால் நான் வந்து விரட்டப் பார்க்கிறேன்.

(இ) பேசின்பிரிட்ஜ் அனல்மின் நிலையம் குறித்து.

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சென்னை நகரத்திலுள்ள, பேசின் பிரிட்ஜிலே இருக்கிற ஒரு அனல் மின் நிலையத்தை மூடிவிடப் போவதாகவும், அங்குள்ள தொழிலாளர்கள் எல்லாம் வெளியேற்றப்படப் போவதாகவும் தொழிலாளர்கள் மத்தியிலே ஒரு.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூடியபிறகு எழுதிக் கொடுங்கள், வேண்டுமானால் ஒத்திவைப்புத் தீர்மானமாக கொண்டு வரலாம். இன்றைக்கு வேறு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

மதுரை திருச்சி சிறைகளிலுள்ள கைதிகளின் உண்ணா நோன்பு போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொர்ணம், ரா. உமாநாத், ஜே. ஹேமச்சந்திரன், எம். செல்லமுத்து, டி. மணி, என். பழனிவேல், கே. ஆர். சுந்தரம்,